Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று -3-1-1994 யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 19 (03-01-1994) திங்கட்கிழமை ஓசை 319

## ஊர்தி அடையாளத் தகடுகள் பொருத்துதல் தொடர்பான விதிகள்

மோட்டார் ஊர்திகளில் அடையாளம் காட்டும் தகடுகள் பொருத்துதல் தொடர்பாக போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர். இவ் அறிவுறுத்தல்களில் இலக்கத் தகடுகளின் அளவுகள், வர்ணங்கள், எழுத்துக்களின் அளவுகள் என்பன குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கவனத்திற் கொள்ளுமாறு மோட்டார் ஊர்தி உரிமையாளர்களை கேட்டுள்ளனர். அவ் அறிவுறுத்தல்கள் வருமாறு: 01. அடையாளம் காட்டும் தகடுகளில் பொறிக்கப்படும் எண்கள், எழுத்துக்கள் ஒரே அளவாக இருத்தல் வேண்டும். 02. அடையாளம் காட்டும் தகடு: ஊர்தியின் முன்னுக்கும், பின்னுக்கும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். 03. எல்லா ஊர்திகளிலும் பொருத்தப்படும் (4ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சு விமானங்கள் மணலாற்றில் தாக்குதல்

மணலாறு மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 10.40 மணியளவில் புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்றும் சியாமாசெட்டி ரகவிமானங்கள் இரண்டும் இக்குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன.

பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தகவல்கள் கிடைக்கவில்லை ஆயினும் பலன் தரும் மரங்கள், பயிர்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானங்கள் மணலாற்றின் பல பகுதிகளில் ஆறு குண்டுகளை வீசின எனச் செய்தி கிடைத்துள்ளது.

# பேச்சிற்கான சூழ் நிலையை அரசே உருவாக்க வேண்டும்!

## சிங்கள விமர்சகர் வற்புறுத்து

[கொழும்பு]

"விடுதலைப் புலிகளை அரசாங்கம் பேச்சுக்கு அழைத்தால் மட்டும் போதாது. அவர்கள் பேச்சுக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இவ்வாறு ஒரு சூழ்நிலை இல்லாத நிலையில் எந்த ஒரு பேச்சுவார்த்தையும் நடைபெறப்போவதில்லை." இவ்வாறு பிரபல அரசியல் விமர்சகர் றோகான் குணரட்ண சந்தேசியவிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை உடனடியாக நிறுத்தும்படி தெற்கில் மக்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர், மேலும் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணுமாறும் வற்புறுத்துகின்றனர். யுத்தத்தினால் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது எனவும் 10 ஆண்டுகள் யுத்தத்தின் பின்னர்தான் இவர்களுக்குத்தெளிவுவந்துள்ளது. தெற்கு மக்கள் தமது சமாதானத் திட்டத்தின் மூலமே வடக்கு கிழக்கு மக்களுக்கு தமது நிலையை வெளிப்படுத்தவேண்டும்.

எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் வடக்குக் கிழக்கில் போராடும் குழுவுடன் பேச்சுக்களை நடாத்த வேண்டும். வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமை வழங்கப்படவேண்டும். இன்று அரசாங்கம் தனது நடவடிக்கை மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கியிருந்த உரிமைகளைக் கூடப்பறித்துள்ளது.

இன்னும் மூன்று மாதங்களில் சமாதானம் தொடர்பாக மக்கள் அரசாங்கத்தை வற்புறுத்தும் நிலை தோன்றும். இது பெரிய அலையாகப் பெருகும் அப்போது சகல அரசியல் வாதிகளும் அதனுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் உலகிலேயே பெரிய அமைப்பாக வளர்ந்துள்ளார்கள். 1974 இல் இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது 10க்கும்குறைவான அங்கத்தவர்களே அதில் இருந்தனர். 20 வருடங்களின் பின்னர். 10000க்கு மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டதாக வளர்ந்துள்ள (4ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா. செயலாளர் செல்லச்சாமி கட்சியிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர்எம்.எஸ் செல்லச்சாமி கட்சித் தலைமையினால் தற்காலிகமாக கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

அரசுக்கு ஆதரவாக தற்போது செயற்படும் செல்லச்சாமி கட்சியின் தலைவரும் அமைச்சருமான தொண்டமான் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியதன் காரணமாகவே அவர் கட்சியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் பணத்தை தொண்டமான் கையாடியதாக செல்லச்சாமி அண்மையில் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தமை தெரிந்ததே.

## செல்லச்சாமி பதவி விலகிக்கொள்ள 14 நாள் காலக்கெடு விதிப்பு

(கொழும்பு)

இ தொ.காவின் பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி 14 தினங்களுக்குள் பதவி விலக வேண்டும். தவறினால் அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கானமுழு அதிகாரமும் பொதுச்சபையாலும் செயற்குழுவாலும் தமக்கு வழங்கப்பட்டுள்ளது என அக்கட்சியின் தலைவர் சௌ தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் நகரில் இந்துமன்ற மண்டபத்தில் நேற்று நடை

அளித்த பேட்டியில் மேற் கண்டவாறு அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மத்திய மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களிப்பது என இ. தொ. காவினால் மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக நடந்து கொண்ட ஏழு மாகாணசபை உறுப்பினர்களும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் எனவும்,

டுள்ளன சில தினங்களாக இவர் செய்தியாளர் மாநாடுகளை தனதுவிருப்பத்திற்கேற்ப நடாத்திதனக்கேற்றமாதிரி செய்திகளை வெளியிட்டார். இவர் 14நாட்களுக்குள் தமது பதவியை இராஜினாமா செய்யவேண்டும். தவறினால் திட்டமிட்டபடி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் செல்லச்சாமியின் அண்மைக்கால நடத்தை பொதுச்செயலர் என்ற பதவிக்கு ஒவ்வாது இருந்தது. மத்

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும்

## புலிகளுடன் பேசுவதற்கு டி. பி. விஜேதுங்க நிபந்தனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்த நான் தயார் ஆனால் விடுதலைப் புலிகளின் தனிநாடு கோரிக்கையை என்னால் ஏற்கமுடியாது. நாட்டின் இறைமை எல்லைக் கட்டுப்பாடு ஆகியவற்றை விட்டுக் கொடுக்க

அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் தாமே வெற்றி பெறுவது உறுதி எனவும் தொடர்ந்து நிகழும் பாராளுமன்ற தேர்தலிலும் ஆளும் கட்சியே வெற்றிபெறும் எனவும் ஜனாதிபதி விஜேதுங்க அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

தயார் எனவும் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே வழி எனவும் விஜேதுங்க மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தும் தமது முடிவு சரியானதேஎன்றும் குறிப்பிட்டார்.

மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பொதுச்சபை, செயற்குழுக் கூட்டங்களின் பின்னர் 'சந்தேசிய' வானொலிக்கு ... னர் எனவும்,

இதே வேளை எம். எஸ். செல்லச்சாமியின் சகல அதிகாரங்களும் இடைநிறுத்தப்பட்

... க்கு ஒவ்வாது இருந்தது. மத்திய மாகாணசபை நிர்வாகத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தில் இ. தொ. காவின் முடிவுக்கு எதிராக வாக்களித்தவர்களுக்கு உதவி வழங்கியதன் மூலம் செல்லச்சாமி இ தொ.கா உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்

இந்தப் பிளவு இ.தொ காவை பாதிக்கும் என்பதை

(3ஆம் பக்கம் பார்க்க)

சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

லைக் கட்டுப்பாடு ஆகியவற்றை விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. இவ்வாறு ஜனாதிபதி டி பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார், பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது தமது அடுத்த முக்கிய பணி எனவும் அவர் கூறினார். வடக்கு கிழக்கு மோதலுக்கு தீர்வுகாண புலிகளுடன் பேச்சுநடத்த தான் நடத்தும் தமது முடிவு சரியானதேஎன்றும் குறிப்பிட்டார்.

கிழக்கு இலங்கை மக்களுக்கு தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள உரிமையை மறுத்துவிடமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இ. தொ·காவின் கூட்டத்தில் செல்லச்சாமி இல்லை

(கொழும்பு)

நேற்று ஹட்டனில் நடந்த இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மத்தியகுழு கூட்டத்திற்கு எம். எஸ் செல்லச்சாமி சமுகம் தரவில்லை அவரது சில ஆதரவாளர்களும் கூட்டத்தை பகிஷ்கரித்திருந்தனர்.

தம்மை கலந்தாலோசிக்காது ஒழுங்கற்ற முறையில் கூட்டம் கூட்டப்பட்டதால் தாம் இவற்றில் கலந்து கொள்ளப்போவதில்லை என செல்லச்சாமிமுன்னரே கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமக்கு அதிகார பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் நேற்று எடுக்கப்பட்ட முடிவுகள் தமக்கு அறிவிக்கப்பட்ட பின்னரே என்ன நடவடிக்கை எடுப்பது என தீர்மானிக்கவுள்ளதாகவும் செல்லச்சாமி தெரிவித்தார்.

# அரசு மீதான மிரட்டலுக்கு அடிபணிய மாட்டேன்

## டி. பி. விஜேதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

எனது அரசுக்கும், பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினர் அச்சுறுத்தி அடிபணிய வைக்க அனுமதிக்க மாடடேன் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார். சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் தற்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்-ஆளும் கட்சி உறவு பற்றி கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மக்கள் அனைவருக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



மேஜர்ஜெயம் (அருள்)

புல்மோட்டைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று அதிகாலை 5.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த மேஜர் ஜெயம்|அருள் (பரசுராமன் சோமசீலன், 2ஆம் வட்டாரம், குச்சவெளி, திருமலை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இன்று சமாதானம் பற்றி பேசுவது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம்

## ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு

''இன்றைய சூழலில் யாழ்ப்பாணம் செல்லும் நான் மீண்டும் சமாதானம் பற்றிப் பேசப்போவதில்லை. தற்போதைய நிலையில் சமாதானம் பற்றி நான் யாழ்ப்பாணத்தில் பேசினால் அது தமிழ் மக்களுக்கு நான் செய்யும் துரோகமாக அமைந்துவிடும்'' இவ்வாறு ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆயரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனித்து வரும் யாழ் மதகுரு ஒருவருக்கே ஆங்கிலத்திருச்சபையின் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஒருவாரம்வரை வன்னிப்பிராந்தியத்திலும் ஏழாம் திகதி முதல் பதின்நான்காம் திகதிவரை யாழ்ப்பாணத்திலும் ஆயர் கென்னத்பெர்னாண்டோ தங்கியிருப்பார்

இவ்வாறு வடபகுதியில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் மீண்டும் சமாதான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுவதற்கு முயற்சிப்பீர்களா? என்று கேட்கப்பட்ட போதே ஆயர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

# பீரங்கிப்படகு கொள்வனவில் 4கோடி அதிகாரிகள் மட்டத்தில் மோசடி

(கொழும்பு)

கடற்படைக்கு மூன்றுபீரங்கிப் படகுகள் வாங்குவது சம்பந்தமாக சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் வட்டாரத்தில் பெரும் தில்லுமுல்லுகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது

ரெண்டர்கள் மூலம் மூன்று ஸ்தாபனங்கள் தங்கள் விலை விபரங்களையும், படகுகளின் இதர விபரங்களையும் சமர்ப்பித்திருக்கின்ற போதும் 40 மில்லியன் ரூபா கூடுதலாகக் கோரியே இஸ்ரேலிய ஸ்தாபனத்திற்கு கொள்வனவு கட்டளை வழங்குவதாக உயர் அதிகாரிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது. கடற்படை இரண்டு இருபது மில்லி மீற்றர் பீரங்கிகளும், 12x7 மில்லி மீற்றர் கனரக துப்பாக்கிகளும் பொருத்தப்பட்ட, ஆழமில்லாத தண்ணீரில் ஓடக்கூடிய அதிவேக படகுகளைக் கோரியிருந்தது

கொரிய ஸ்தாபனம் ஒன்று 3.7 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பீரங்கிப் படகுகளின் விபரங்களையும், கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் 3. 66 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பீரங்கிப்படகுகளின் விபரங்களையும் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்தன.

ஏனையவற்றைவிட 40மில்லியன் ரூபா கூடுதலான இஸ்ரேலிய பீரங்கிப் படகுகளை கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு உடன்பட்டுள்ளது.

# மீனவர் ஒருவர் கரை திரும்பவில்லை

(குருநகர்)

வருடப் பிறப்பன்று நள்ளிரவு பூநகரி- காஞ்சகாடு, மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்தும் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்துப் படகுகளில் இருந்தும் எறிகணை, பீரங்கி, துப்பாக்கிச்சூடு பரவலாக

(4ஆம் பககம் பார்க்க)

# தரை, கடல் ஆதிக்கத்தை அரச படைகள் இழந்துவிட்டன

## முன்னாள் விமானப் படைத்தளபதி

''விடுதலைப் புலிகள் வசம் ஒரு பலமான இராணுவ அமைப்பு உண்டு. அது சிறிய அமைப்பாயினும் உயர்ந்த உணர்வு பூர்வ செயற்திறன் கொண்டதாகும். அத்துடன் நன்கு பயிற்றப்பட்டதும், உறுதியானதுமாகும். இந்த அமைப்பில் எல்லாவற்றிலும் விடதற்பொழுது இளம் பெண்கள் முன்னணியில் நிற்கிறார்கள். கடலிலும் புலிகள் பலமாக உள்ளனர். வான்பரப்பில் மட்டுமே எமக்கு மேலாதிக்கம் உண்டு.'' இவ்வாறு ஓய்வு பெற்ற சிறிலங்கா விமானப் படைத் தளபதி எயர்மார்சல் ஹரி குணதிலகா தெரிவித்துள்ளார். ''லங்கா காடியன்'' என்ற மாத இதழுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை புலிகளின் இறங்குதுறையை இலக்காகக் கொண்டது இதைத்தடை செய்ய தரைப்படையால் மட்டும் முடியாது வான்படையாலேயே இதைச்செய்ய முடியும்.

மேலும் விடுதலைப்புலிகள் பலாலித்தளத்தை தற்கொலைப்படை மூலம் தாக்க முயற்சிக்கக்கூடும் இதன்மூலம் எமது வான்மேலாதிக்கத்தையும் தகர்த்து விடுவதற்கு புலிகள் சகல வழிகளையும் கையாளுவார்கள் ஆனால் பிரச்சினை அதைவிட ஆழமானது பலாலித்தளத்தின் கட்டுப்பாட்டை பற்றியே தான் கவலைப்படுகிறேன்.

எமது படையினர் மத்தியில் ஒழுங்கின்மையை அனுமதிக்க முடியாது. அவர்கள் மத்தியில் நம்பிக்கையையும் உணர்வையும் ஊட்ட வேண்டும் அத்துடன் முப்படைத் தளபதிக

(3ஆம் பக்சம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6|- க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சக லேன், யாழ்ப்பாணம். (7065)

### பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, Jaffna. (சி-8249)

### தவறிவிட்டது

வைத்தியநாதன் இறிதரன் மருந்துப்பால்மா விற்பனை நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியாய கொண்ட எனது தேசிய அடையாள அட்டையும் 690950642 V சாரதி லைசன்ஸ் 224632 அட்டையும் கோண்டாவில் சந்திக் கருகாமையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். (7119)

### விற்பனைக்குண்டு

ஹொண்டா வீற் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சந்திரன் கராஜ் (வீரமாகாளி அம்மன் கோவிலருகில்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (7120)

### மருந்தில்லா மருத்துவம்

யுத்த கால சூழ்நிலையில் செந்தமிழ் ஈழ மக்களை பாதுகாக்கும் திட்டம். முப்பது வருட சமூக நலன் ஊழியன், விரிவுரையாளர் கதிர்காமத் தம்பி ஜெகநாதன், இலக்கம் 11 குறசட் ஒழுங்கை யாழ்ப்பாணம். (முன்னாள் உலக சுகாதார பிரதிநிதி வீட்டில் வசிப்பவர், தாய்லாந்து, இந்தோனேசியா) (7118)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலன் (HYLINE BROWN) பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி, சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (7122)


வெளிவந்து விட்டது!

---

## 31-ம் நாள் நினைவலைகள்

03-01-1994



### அமரர் நாகலிங்கம் கனகரத்தினம்

(நாவற்குழி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.09.1919 | 04.12.1993 |

நிலமிசை விழுது போக்கி நீண்டநற் கிளைக ளோச்சி
நலம்பெற மக்க ளீண்டி நலிவெலாம் நீங்கும் வண்ணம்
உலர்விலா நிழல்தந் தாளும் உயர்வுடை ஆலே போன்று
தலத்தனில் வாழ்ந்த வுன்றன் தகைமையை மறவோ மையா.

தங்கள் பிரிவால் வருந்தும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(7077)

---

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு: 20-08-1924

உதிர்வு: 04-12-1993

### அமரர் பரமு கந்தையா

(கணேசா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

04-12-1993 அன்று மரணமெய்திய எனது கணவனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எங்கள்

---

## 45-ம் நாள் நினைவு அஞ்சலி



பிறப்பு: 09-07-1973

வீரச்சாவு: 22-11-1993

### கப்டன் விடுதலை (ஜின்னா)

(செல்வி கலாலட்சுமி கணபதிப்பிள்ளை)

இவர் பூநகரி ஆலங்கேணி முத்தையா கணபதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், திருமதி சோதிமலர் — பூநகரி ஆலங்கேணி, திருமதி இராசலட்சுமி—பிரான்ஸ், திரு. சத்தியசீலன்-பிரான்ஸ், திருமதி புஸ்பலட்சுமி—டென்மார்க், திரு. முத்தையா - டென்மார்க், இராயேஸ்வரன்—ஆலங்கேணி ஆகியோரின் சகோதரியும், திரு. தர்மலிங்கம்—பிரான்ஸ், திரு. மகாலிங்கம்—பிரான்ஸ், திரு. வைதீஸ்வரன்—டென்மார்க், திருமதி சத்தியசீலன்—பிரான்ஸ் ஆகியோரின் மைத்துனியும், செல்வன்பேரின்பநாதன்—பிரான்ஸ், செல்விசெல்வா—ஆலங்கேணி, செல்வன்—ஆலங்கேணி, நிசா—ஆலங்கேணி, செல்வி துஸ்யந்தினி—பிரான்ஸ், செல்வன் செந்தூரன் — பிரான்ஸ், செல்வி நிரோசினி — டென்மார்க் ஆகியோரின் சிறிய தாயும், செல்வன் கிலிண்டன்—பிரான்ஸ் இன் மாமியும் ஆவார்.

இவரின் அந்தியேட்டிக் கிரியை 05-01-94 புதன் கிழமை சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

மு. கணபதிப்பிள்ளை
(தந்தை)

(7114)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### கியோமர் றோசாறி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 18-11-1950 | 05-12-1993 |

வீட்டினின் ஒளியாய் விளங்கிய தீபம்
வீணரின் அரக்கத் தனத்தினால் மோட்ச
வீட்டினைச் சேர்ந்த போதிலும் எங்கள்
விம்மலும் நெஞ்சத் துயரதுஞ் சற்றும்
விலகிட வில்லை; விண்ணவ ரோடு
விமலனின் பாதம் இருந்தருள் கூர
விளங்கிடச் சாந்தி வேண்டினம் நாமும்.

---

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 24-06-1964

உதிர்வு: 04-12-1993

சில்லாலையைச் சேர்ந்த

### திருமதி மேரிஆன் யோசறஞ்சினி

**சென். யோண் புவிராசசிங்கம்**

(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி உரிமையாளர்)

''உயிருள்ளவரை எம்மை நேசித்தாய்
உதிர்ந்த பின்னும் உனை மறவோம்''

03-01-1994 இன்று அன்னாரின் ஆத்மசாந்திக்காக ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் பிற்பகல் 4-30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி மன்றாடும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிச் சடங்கில் பங்குபற்றியோர்க்கும் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் நன்றி.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

கணவன், பிள்ளைகள்,
உறவினர்.

(7118)

---

## நினைவு கூருகின்றோம்…

### 1994-01-03

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் திருகோணமலை - மூதூர், பள்ளிக்குடியிருப்புப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

சுரேஷ் (வை. சுதேசராசா-சம்பூர்- திருகோணமலை)

இதே ஆண்டு சிறிலங்காப்படையினராற் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்பு தொலைத்தொடர்பு நிலைய ஊழியரான தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு திருகோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினராற் கைதாகி மூதூர், கடற்கரைச் சேனைப் பகுதியில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

கிட்ணன் (சிவசேகரம் கிருஸ்ணராசா-கட்டைப் பறிச்சான்-திருகோணமலை)

குணம் (இராசரத்தினம் குணரத்தினம்-சேனையூர்-திருகோணமலை)

1989ஆம் ஆண்டு கொழும்பிற் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

கணேசலிங்கம் ஜீவகுமார்-ஜீவன் (சிவன்

வெளிவந்து
விட்டது!
வரதர்கதைமலர் 4
**வேப்பமரத்தடிப்
பேய்!**
எழுதியவர்:
சி. சிவதாசன்
**விலை: ரூபா 12/-**
(7084)


...வனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் 03.01.1994 திங்கள் (இன்று) நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்

பிரிவால் துயருறும்

''கோணர்வளவு''
புலோலி தெற்கு,
புலோலி (7078)

மனைவி, மைத்துனர்
க. கிருஸ்ணபிள்ளை
(கனேசா ஸ்ரோர்ஸ் பங்காளர்)

...
விமலனின் பாதம் இருந்தருள் கூர
விளங்கிடச் சாந்தி வேண்டினம் நாமும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 04-01-1994 ஆம் நாள் காலை 7 - 45 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குண்டு வீச்சன்று அத்தியாவசிய அவசர உதவிகள் புரிந்தோர்க்கும் அகால மரணச் செய்தியறிந்து துயரில் பங்கு கொண்டு ஈமக்கிரியைகளிற் கலந்து கொண்டோர்க்கும் எமது நன்றிகள்.

20, 3-ம் குறுக்குவீதி,
பாஷையூர்.

கணவன், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பெறா மக்கள், மருமக்கள்.
(7099)

...
ளரான,
**கணேசலிங்கம் ஜீவகுமார்-ஜீவன்** (சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு-யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு-கிரான், கிண்ணையடிப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினராற் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனைக்குடிப் பகுதியிற் தேசவிரோத ''ஜிகாத்'' குழுவினராற் கொலை செய்யப்பட்ட
**ஆதம்** (எஸ். எம். ஆதம்பாவா-சாய்ந்தமருது-அம்பாறை)

யாழ்ப்பாணம்-சாவகச்சேரி, நுணாவில் பகுதியிற் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**கப்டன் நடேசன்** (தம்பு சிங்கராசா-மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி-யாழ்)
**2-ம் லெப். பாபு** (இளையதம்பி பாபு-கல்வயல், சாவகச்சேரி-யாழ்)

1991ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக மிதிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த,
**நவா** (— தங்கவேல்-சீனன்குடா திருகோணமலை)

1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையிலிருந்து - மண்முனைத்துறைக்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுகையில், அதனை முறியடிக்கு முகமாக கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி முகாம்களிலிருந்து வந்து சுற்றிவளைக்க முனைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதக் குழுவினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,
**மேஜர் வினோத்/சர்மிலராஜ்** (முருகேசு அசோகன்-கொக்கட்டிச்சோலை-மட்டு)

மட்டக்களப்பு-ஏறாவூர், ஐயங்கேணி பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,
**கிளைமன்** (மாமாங்கம் சண்முகநாதன்-ஐயங்கேணி மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி-8253)


உறுதியான கணனிக் கல்விக்கு
வெலிங்டன் சந்திக்கருகில்



# UNIKCO
## COMPUTER CENTRE

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.**

- WORD PROCESSING (Wordstar Rel - 5. 5) and MS-DOS
- d BASE III PLUS and MS-DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- PASCAL LANGUAGE (Files and Graphics)
- BASIC LANGUAGE (Sound Graphics and Files)

- காலை, மாலை வகுப்புகள்
- தமிழில் விளக்கங்கள்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- PRACTICALS ON IBM, Compatibles
- Special Classes for Managers, Graduates, Accountants, Typists, Bankers, Clerks and Data Entry Operators.

ஆரம்பம்:- 8-01-94 (வார இறுதி நாள் வகுப்புகள்)
7-01-94 (வாரநாள் வகுப்புகள்)

JOIN WITH US TO STUDY
THE LATEST COMPUTER TECHNOLOGY

மேலதிக விபரங்கட்கு:
37, CLOCK TOWER ROAD,
JAFFNA.
(சி-8242)



## ஆண்கள் தையல் சேவை

யாழ் நகரில் பலவருடங்கள் புகழ் வாய்ந்த
சேவை வழங்கிய தையற்காரரின்
கம்பீர உடைகள் உங்களை
அலங்கரிக்க இதோ சந்தர்ப்பம்

இன்றேஎமது தையல்பகுதியை நாடுங்கள்

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- டிசெம்பர் மாதத்திற்கான பரிசுத்திட்ட சீட்டிழுப்பு இன்று பகல் 11.00 மணியளவில் இடம்பெறும்.
(சி-8271)

சிந்தனைக்கு

குறைவாகவோ கூடுதலாகவோ வெள்ளைப் பூண்டு தின்றால் வாயில் வீச்சம் மணக்கத்தான் செய்யும்.
- திபெத் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 0 -01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# இனப்படுகொலைக்கே பங்காற்ற முடியும்!

சிறிலங்காவின் புதிய இராணுவத் தளபதி தனது பங்கிற்கு, பதவி ஏற்றதும் போர் பற்றிய தனது அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதன் பிரகாரம், வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் போரை விரைவில் முடிவிற்குக் கொண்டு வருவதற்கென ஆகக் கூடிய இராணுவ பலத்தைப் பிரயோகித்தல், கடந்த காலத் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகள் என்பனவற்றை எடுத்தல் மற்றும் இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட வேண்டிய மாற்றத்தின் தேவை பற்றியும் பேசியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சிறிலங்கா இராணுவத்தின் - அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எப்பொழுதுமே முழு அளவினதாகவே இருந்து வந்துள்ளது. அத்தோடு, சிறிலங்காவின் பெரும் வளங்களும் போருக்காக இயன்றளவு பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளன.

இந்த வகையில், கடந்த பத்து வருடகாலத்தில் பலமடங்காக வீங்கிப் பெருத்துள்ள சிறிலங்கா ஆயுதப்படையினரின் எண்ணிக்கையும், நவீனப்படுத்தப்பட்டுள்ள அதன் ஆயுத தளபாடங்களும் எப்பொழுதும் முழு அளவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஆயுதப்படையினரதும் தளபாடத்தினதும் அளவு போதாதது என்றே சிறிலங்காவின் படைத்துறைத் தலைமை, கூறிவந்தது. இந்த நிலையில், வடக்கு - கிழக்கில், புலிகளை வெல்ல தனதுமுப்படைகளின் முழுப்பலத்தையும் சிறிலங்காப் படைத்துறைத்தலைமை பயன்படுத்தி வந்ததில் சந்தேகப்பட ஏதுமில்லை இந்த நிலையில், அதிஉயர் படைப்பலத்தைப் பயன்படுத்துதல் என்பதில் புதிதாக ஏதும் இருப்பதாக இல்லை.

மேலும், சிறிலங்கா இராணுவம் கடந்த காலத்தில் பலதோல்விகளைச் சந்தித்தபோதெல்லாம் அதுகுறித்து மீள் பரிசீலனைகளைச் செய்தே வந்துள்ளது. இந்நிலையிலும் தோல்விகளை சிறிலங்கா இராணுவத்தால் தவிர்க்க முடியாமல் போய்விட்டது. தொடர்ந்து ஏற்பட்டு வரும் பெரும்இழப்புக்களைச்சமாளிக்க முடியவில்லை. இதன் காரணமாக, கடந்த காலத் தோல்விகளுக்குத் தனியாக இராணுவத்தின் திறமையின்மை என்பதை விட விடுதலைப் புலிகளின் திறமை பற்றியே சிந்திக்க

# காணிப் பயன்பாட்டு நடவடிக்கை பிரதேச செயலகத்திடம் ஒப்படைப்பு

## யாழ். செயலக கூட்டத்தில் முடிவு

தற்போது மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் காணிபயன்பாட்டு நடவடிக்கைகள் பிரிவு மட்டத்திற்கு பராதீனப் படுத்தப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்ற காணிப்பயன்பாடு பற்றிய கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. அங்கு எடுக்கப்பட்ட மேலும் சில தீர்மானங்கள் வருமாறு:

இதுவரை தென்மராட்சி வலிகிழக்குப் பிரிவுக்கும் நல்லூர் பிரிவு செயலரின் அரியாலை பகுதி ஆகியவற்றுக்கும் நிலமதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போதைய நிலப்பயன்பாடு, உத்தேசிக்கப்பட்ட நிலப்பயன்பாடு பற்றிய மதிப்பீட்டு படவரைபு தயாரிக்கப்படல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்டத்தில் நிலப் பயன்பாட்டு மதிப்பீட்டு ஆய்வு மருதங்கேணிபகுதியில் மேற் கொள்ளப்படவுள்ளது. நில அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளங்கள் இப்பிரிவில் உள்ளமையினால் இம் மதிப்பீடு மிக அவசியமாக தேவைப்படுகின்றது.

உவரேற்றத்தினால் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள நிலங்களை பயன்பாட்டுக்கு கொண்டுவருவதன் பொருட்டு அவற்றின் மண்மாதிரிகளை பரிசோதனை செய்யக்கூடிய வசதிகளை கொண்டுள்ள யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உரிய மண் பரிசோதனைகளை மேற்கொள்வது.

யாழ் மாவட்டத்தின்காடாக்கல் நடவடிக்கைகளையும் காணிபயன்பாட்டு அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கொண்டு வருவது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (சி)

# இலவச வைத்தியசாலை மாமுனையில் திறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கின் வைத்திய வசதிகள் குறைந்ததும், இடம்பெயர்ந்த மக்கள் வாழ்கின்றதுமான மாமுனையில் பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. மாமுனை கலைமகள் சனசமூக நிலையத்தில் அதன் தலைவர் திரு. வே. தவச்செல்வன் தலைமையில் இவ் ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளைத் திறப்பு விழா நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. சி. முருகேசபிள்ளை சம்பிரதாயபூர்வமாக வைத்திய சாலைக் கிளையைத் திறந்து வைத்தார். ஆயுர்வேத வைத்தியர் செல்வி லலிதாதேவி பரராஜசிங்கம் நோயாளர்களுக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்கி, வைத்திய சேவைகளை ஆரம்பித்து வைத்தார். பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர், கடற்றொழில் பரிசோதகர் திரு. சு. கதிர்காமத்தம்பி, சனசமூகநிலைய சமாசத் தலைவர் திரு. டொ. அரியகுமார் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர் செம்பியன்பற்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. பொ. தங்கராசா நன்றியுரை கூறினார். பிரதி திங்கட்கிழமைகள் தோறும் இவ் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளை இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# அழகியல் கல்விக்கு 500 ஆசிரியர்கள்

(கொழும்பு)

அழகியற்கல்வி பயிற்றுவதற்கு ஐந்நூறு ஆசிரியர்களை கல்விச்சேவைகள் சபை தெரிவுசெய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கக்கூடியவர்களுக்கு நியமனம் வழங்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

# புதிய கற்கைநெறிகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் இம் மாதம் இசைரசனை பற்றிய பொது விரிவுரைத்தொடரும் பொதுவாழ்வில் எந்திரப் பொறியியல் எனும் அடிப்படைக் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# தமிழீழ காவல்துறைக்கு மானிப்பாய் இந்து பாராட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து களவாடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரத்தை இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பெற்றுக் கொடுத்த தமிழீழ காவல் துறையினருக்கு அதிபர், ஆசிரியர், மாணவர்களால் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12. 10 93 இல் திருடர் கோஷ்டி ஒன்று இப் பாடசாலையில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை களவாடிச் சென்றமை குறித்து அதிபரினால் தமிழீழ காவல்துறையினருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

காவல்துறையினர் இத்திருடர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, திருடர்களைக் கண்டுபிடித்து களவாடிய நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கைப்பற்றி அதிபரிடம் கையளித்ததை அடுத்தே நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3000 தமிழ் அகதிகள் விரைவில் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தைப்பொங்கலின் பின்னர் இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 3000 பேர் தாயகம் வந்து சேருவார்கள் என அறிவிக்கப்பட்

தற்போது 88,000 பேர் தமிழ் நாட்டு அகதி முகாம்களில் உள்ளனர். இந்த புதிய ஆண்டில் அதிகமான அகதி மக்கள் தாயகம் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று

# 40 கொலைகளைச் செய்த ஜே. வி பி. உறுப்பினர் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி. அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் இந்தக்கைதி ஜே. வி. பி. அமைப்பு தனது நடவடிக்கைகளை செயற்படுத்திய காலகட்டத்தில் 40 பேரை கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் அம்பாந்தோட்டை பகுதியில் மட்டும் 19பேரைக் கொலை செய்துள்ளார் என்றும் அம்பலாந்தோட்டையில் பெரகல என்ற இடத்தில் புஞ்சிமகாத்தையா என்பவரின் குடும்பத்தில் 5குழந்தைகளை துண்டு துண்டாக வெட்டிக் கொலை செய்துள்ளார். தாயை கட்டி வைத்து தாயின் கண்முன்னால் இக்குழந்தைகளை வெட்டி கொலை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 5பொலிசார் சென்ற ஜீப் வண்டியை கண்ணி வெடி வைத்து தகர்த்தவர் என்றும் இவர்மீது பொலிசார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

# காயமடைந்த படைக்கு பொருள்கள் விநியோகம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு போரில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் படையினருக்கு பல அத்தியாவசிய பொருள்களை வழங்கும் வைபவம் ஒன்று நேற்று முன் தினம் காலை கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் இடம் பெற்றது. தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா விடுத்த கோரிக்கையை அடுத்து பல்வேறு நிறுவனங்கள் 35 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளன. சிறிலங்காவிற்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் நடந்த கிரிக்கெட் போட்டியின் மூலம் கிடைத்த பணத்தின் ஒரு பகுதி படையினரின் சேம நலனிற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ அங்கு தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா, புதிய இராணுவ தளபதி ஜெரிடி சில்வா, மேஜர் ஜெனரல் லக்கிஅல்கம, இராணுவ வைத்திய சாலை பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் டாக்டர் துரைராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அமய ஊழியர்க்கும் 24நாள் மருத்துவ விடுமுறை

(கொழும்பு)

சேவை ஊர்ஜிதம் செய்யப்படாத (அரசாங்க) அமய ஊழியர்களுக்கும் ஏனைய அரசாங்க ஊழியர்களைப் போலவே மருத்துவ விடுமுறையாக 24 நாட்களையும், சமயாசமய விடுமுறையாக 21 நாட்களையும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதுகாலவரை, சேவை ஊர்ஜிதம் செய்யப்படாத ஊழியர்களுக்கு சமயாசமய விடுமுறையாக 21 நாட்களும் மருத்துவ விடுமுறையாக 14 நாட்களுமே வழங்கப்பட்டன.

# டிசம்பர் நிவாரணமாக அரிசியும் சீனியும்

இடம்பெயர்ந்தோருக்கான டிசம்பர் மாத முதல் இரண்டு வாரத்திற்கான இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களாக அரிசியும், சீனியும் மட்டுமே வழங்கப்படும். யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி இவ்விரு பொருள்களையும் தவிர மாவோ பால்மாவோ ஏனைய பொருள்களோ மேற்படி விநியோகத்தின் போது வழங்கப்பட மாட்டாது எனத் தெரியவந்துள்ளது. (22)

# 'விடிவெள்ளி' தொழில்நுட்ப பயிற்சி நிலையம் திறப்பு

வரும் பெரும்இழப்புக்களைச்சமாளிக்க முடியவில்லை. இதன் காரணமாக, கடந்த காலத் தோல்விகளுக்குத் தனியாக இராணுவத்தின் திறமையின்மை என்பதை விட விடுதலைப் புலிகளின் திறமை பற்றியே சிந்திக்க வேண்டியதே அவசியமான தாகும்.

இதேவேளை, சிறிலங்கா இராணுவக்கட்டமைப்பு மாற்றமானது அரசாங்கங்களின் மாற்றங்கள், அரசியலில் அதிகாரத்திலுள்ளவர்களின் மாற்றங்கள், இராணுவத்தளபதிகளின் மாற்றங்கள்என்பனவற்றோடும் யுத்த களத்தில் ஏற்படும் தோல்விகளின் பிரதிபலிப்புக்களோடும் நேரடித் தொடர்புள்ளவையாக உள்ளது. இது இராணுவக் கட்டமைப்பின் பலவீனத்திற்கும் சிதைவிற்கும் முக்கியமான எடுத்துக்காட்டுகள் போன்றவையாகும். இந்தவகையில் புதிய தளபதியின் கட்டமைப்பில் செய்யப்பட வேண்டும் என்ற எதிர்பார்க்கையானது அவரின் அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான ஒழுங்கு மாற்றம் என்றே குறிப்பிடமுடியும். ஏனெனில், சிறிலங்கா இராணுவம் போரில் வெற்றி பெறுவதற்காக எனக்கூறிக்கொண்டு பல தடவை கட்டமைப்பு மாற்றத்திற்கு கடந்த காலத்தில் உட்பட்டிருப்பினும் போரில் இதுவரை அதனால் வெல்லமுடியவில்லை என்பதே உண்மையாகும்.

அதாவது, கடந்த காலத்தில் அரசியல்வாதிகளும், இராணுவத் தளபதிகளும் செய்த இராணுவக் கட்டமைப்பு மாற்றம் இராணுவத்திற்கு வெற்றியை தேடிக் கொடுக்கவில்லை. மாறாக, ஒவ்வொருவரும் தமது பங்கிற்கென இராணுவத்திற்குப் பெரும் இழப்பையும், விடுதலைப் புலிகளுக்குக் கணிசமான 'ஆயுத விநியோகத்தையும்' செய்ததாகவே முடிந்தது.

இந்தவகையில், புதிய தளபதி ஜெரி டி சில்வாவின் அறிவிப்புக்கள் எந்தளவிற்கு, எந்தவகையில் இராணுவ வெற்றிக்கு உதவும் என்பதில் பல கேள்விகள் உள்ளன. அத்தோடு, இராணுவத்தின் வெற்றி என்பது தனியாக இராணுவத்தின் திறமை, தளபதியின் ஆற்றல் என்பதோடு மட்டும் சம்பந்தப்பட்டதாக இல்லை. -புலிகளின் ஆற்றல், திறமை, தலைமையின் ஆளுமை என்பனவற்றுடனும் சம்பந்தப்பட்டுள்ளது.

ஆகையினால் புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரிடிசில்வா எண்ணுவதுபோல் இராணுவ வெற்றி என்பது இலகுவானதல்ல. இதனால் முன்னாள் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர்கள், ஜனாதிபதிகள் போன்று ஜெரிடிசில்வாவும் இதில் தோல்வி அடைவது தவிர்க்க முடியாதது. ஆனால், முன்னையவர்கள் போன்று இவரும் இனப்படுகொலைக்கு திறம்பட உழைக்க முடியும். இதனை இவரும் செய்து முடிப்பார் என்று எண்ணுவதிலும் தவறில்லை. ஏனெனில் வடபகுதியின் இணைப்பதிகாரியாக ஜெரிடிசில்வா நியமிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் பல உயிர்களைக் காவு கொள்ளும் விமானத் தாக்குதல்களுக்கு இவரின் அனுமதி கிடைத்ததில் இருந்தேபுரிந்து கொள்ள முடியும்

பொது விரிவுரைத்தொடரும் பொதுவாழ்வில் எந்திரப் பொறியியல் எனும் அடிப்படைக் கற்கைநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

18வயதிற்கு மேற்பட்ட ஆர்வமுள்ள எவரும் இக்கற்கைநெறிகளில் சேர்ந்து பயிலலாம். ஆர்வமுள்ளவர்கள் இம்மாதம் 5ஆம் திகதிக்கிடையில் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் மூலம் கற்கைநெறியின் பெயரைக் குறிப்பிட்டு புறநிலைப் படிப்புக்கள் அலகிற்குவிண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரன் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 8000 பேர் தாயகம் வந்து சேருவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

களில் உள்ளனர். இந்த புதிய ஆண்டில் அதிகமான அகதி மக்கள் தாயகம் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## தேசிய அடையாள அட்டை; நான்கு ரகசியக் குறிப்புகள்

(கொழும்பு)

உண்மையான தேசிய அடையாள அட்டையில் நான்கு குறிப்புகள் அடங்கியிருக்கும். ஆனால் அதை வெளியிட முடியாது என்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஆரிய சமரவீர தெரிவித்துள்ளார்,

சட்டவிரோதமாக அடையாள அட்டை உபயோகிப்பவர்களினதும், செய்பவர்களினதும் நடவடிக்கையை கட்டுப்படுத்தவே இந்த திட்டம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'விடிவெள்ளி' தொழில்நுட்ப பயிற்சி நிலையம் திறப்பு

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினரால் நேற்று முன்தினம் நல்லூர் வட்டத்தில் 'விடி வெள்ளி' தொழில்நுட்ப பயிற்சி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் நல்லூர் வட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வேணுவின் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. மங்கள விளக்கை யாழ் மாவட்ட அரசியல் நிர்வாக துணைப் பொறுப்பாளர் இளையவன் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்கள் ஏற்றி வைத்தார்.

தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தினை யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தனிகைச் செல்வி திறந்து வைத்தார்.

## காபூலில் கடும் சண்டை 8 பேர் பலி; 250 பேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அதிபர் ரபானியிடம் விசுவாசம் காட்டும் படையினருக்கும் ஜெனரல் அப்துல் ரசீத் டோஸ்டன் தலைமையிலான வடக்குப் பகுதி இயக்கத்தினருக்குமிடையே நேற்று முன்தினம் காபூலிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மூண்ட கடுமையான சண்டையில் குறைந்தது எட்டுப் பேர் பலியானதாகவும், 250 பேர் வரையில் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும் காயமுற்றவர்களும் மருத்துவமனை சென்றடைந்தவுடன் உயிரிழப்புகள் பற்றிய சரியான எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனத் தகவல்கள் கூறுகின்றன, அதிபரிடம் விசுவாசமாகவுள்ள துருப்புகள் தங்களது எதிரிகளிடமிருந்து விமான நிலையத்தை கைப்பற்றி விட்டதாகக் காபூலில் உள்ள அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

இதனிடையே அதிபர் ரபானியை எதிர்க்கும் எல்லாம் குழுக்களும் இந்தச் சண்டையில் பங்கேற்பதாகப் பிரதம மந்திரி திரு. குல்புதீன் ஹெக்மத்தியா ஷேக்ஸ்பி இஸ்லாமியக் கட்சிக்கான பிரதிநிதி கூறியுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களில் மிகக் கடுமையானதாக கருதப்படும். இந்தச் சண்டையில் ஹெக்ஸ்பி படைகளும் பங்கேற்பதாக அவர் கூறினார்.

## சுவாமியால் தீமையே

(சென்னை)

சுப்பிரமணிய சுவாமியால் நன்மையைவிட தீமையே நாட்டிற்கு ஏற்படுகிறது என நல்லாட்சி இயக்கத்திலிருந்து விலகிச் சென்ற சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். சுவாமியின் வேலையால், தி. மு, க. உடைந்தது. பாட்டாளி மக்கள் கட்சி உடைந்தது. காங்கிரஸ் உடைந்தது. அ. தி. மு. க. வை பிரிப்பதில் அக்கறை காட்டுகின்றார்.

### புலிகளுடன்

மேலும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் அமைதிதிரும்பிவிடுமோ என்று விடுதலைப் புலிகள் அஞ்சுவதுபோல் தெரிகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

### செல்லச்சாமி

அவர் ஏற்கவில்லை பலர் பல தடவை இ. தொ. கா வை பிளக்க முயற்சித்தனர். ஆனால் இத்தகைய முயற்சிகளால் இ. தொ கா பலவீனமடையாது எனவும்தொண்டமான் கூறினார்.

### அரசு

சம உரிமை வழங்க நான் தயார். ஆனால் நெருக்கடி கொடுக்கும் உத்திகளுக்கோ மிரட்டல் களுக்கோ நான் பணிய மாட்டேன் எனவும் ஜனாதிபதிவிஜேதுங்கமேலும் தெரிவித்தார்.

### தரை

ளும் பொலிஸ்மா அதிபரும் இணைந்த ஒரு கட்டளைப் பணியகம் செயற்பட வேண்டும். யுத்த தந்திர முடிவுகள் விவேகமற்றவர்களின் குறைந்த தலையீட்டுடன் எடுக்கப் பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கைக்குண்டு வெடிப்பு 12 சிப்பாய்கள் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள 'அட்டதேஸ்கட' என்ற பகுதியில் உள்ள இராணுவ முகாமில் கைக்குண்டு ஒன்று வெடித்து சுமார் 12 சிப்பாய்கள் படுகாயமடைந்துள்ளனர்.

புதுவருட தினத்தன்று நடைபெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் தற்பொழுது அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## உண்மையான தி. மு. க. பொங்கலுக்குள் உருவாகும்!

உண்மையான தி. மு. கழகம் தைப்பொங்கலுக்கு முன்னர் தொடங்கப்படும் என்று வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

சில எம். பிக்கள் கறுப்புப் பூனை கூலிப்படையை தமது பாதுகாப்பிற்காக கேட்டுப் பெறுவது ஒரு கௌரவ மிக்க அடையாளமாகி விட்டது.

இதுபோன்ற பாதுகாப்பு வலயங்கள் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தவே உதவும்.

திரு. வை. கோபாலசாமியிடம் இலங்கை உளவுப்படையால் தங்கள் உயிருக்கு ஆபத்து உருவாகியுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளது குறித்து கேட்ட போது, இதற்கெல்லாம் நான் பயப்படப்போவதில்லை அதனால் பாதுகாப்பு நான்கேட்கமாட்டேன்என்று தெரிவித்தார்.

### தளபதி ஓய்வு

தென்பிராந்திய இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ எஸ். கல்கத் கடந்த வெள்ளிக்கிழமை தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதிப்படைக்கு லெப்டினன்ட் ஜெனரல்கல்கத் தலைமைவகித்து செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல்வாதிகள் விளம்பரத்திற்கு பொது நிதியை பயன்படுத்ததடை

அரசியல் பிரமுகர்களுக்கும் கட்சிகளுக்கும் விளம்பரம் அளிக்கும் வகையில் பத்திரிகை விஞ்ஞாபனங்களும் விளம்பரங்களும் பிரசுரிக்கப்படுவதற்கு பொது நிதியை பயன்படுத்துவது முறையற்ற செயல்என ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் விஜேதாஸவினால் கையொப்பமிடப்பட்டு ஜனாதிபதிசார்பில் விடுக்கப்பட்ட இச் சுற்றறிக்கை சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அரச பணத்தை பயன்படுத்தி தனிப்பட்ட அரசியல் வாதிக்கு செல்வாக்கை பெற்றுக்கொடுப்பதற்காக இவ் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுவதாகவும் அரச பணம் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் பிரசார நோக்குடன் பொதுப் பணத்தை செலவிட அனுமதிக்க வேண்டாம் என அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள் ஆகியோருக்கு கண்டிப்பான பணிப்புரை ஜனாதிபதி செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இ.தொ.கா. மற்றும் அதன் தலைவர், அமைச்சர் தொண்டமான் தொடர்பாக பத்திரிகை சிலவற்றில் முழு அளவிலானவிஞ்ஞாபனங்களும் விளம்பரங்களும பிரசுரமாகியிருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது

## தேவை

1. அச்சகம் ஒன்றிற்கு தமிழ் ஒப்புநோக்குநர் தேவை.
2. பிரபல மாதாந்த சஞ்சிகை ஒன்றிற்கு ஆசிரியராகக் கடமையாற்றக் கூடியவர் தேவை. ஆங்கில அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

அனுபவ ரீதியான சான்றிதழ்களுடன் 3.1.94 காலை 10.30 மணிக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு சமுகம் தரவும்.

'சாளரம்'

வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(7123)

முதற்றடவையாக

# A/L 94 DAY CLASS

# விஞ்ஞானப்பிரிவு

(மீட்டல்-வினா விடை வகுப்பு)

ஆரம்பம்

10-1-94 காலை 8.30 மணி

❋ திங்கள்,செவ்வாய், வியாழன், வெள்ளி

## ஊர்தி

அடையாளம் காட்டும் தகடுகளின் மேற்பரப்பு முழுவதிலும் ''மஞ்சள்'' வர்ணம் தீட்டப்பட்டிருத்தல் வேண்டும் இதில் பொறிக்கப்படும் அடையாளம் காட்டும் எழுத்துக்கள், எண்கள் யாவும் ''கறுப்பு'' வர்ணத்தில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04 மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய ஊர்திகளில் பொருத்தப்பட்டு இருக்கும் அடையாளம் காட்டும் தகடுகளில் பொறிக்கப்படும் அல்லது எழுதப்படும் எழுத்துக்கள் அல்லது எண்கள் என்பவற்றின்உயரம் 3 1/2''(அங்குலத்திற்கு குறையாமலும் எண்கள் எழுத்துக்கள் ஆகிய ஒவ்வொன்றினதும் அகலம் (தடிப்பு) 5/8'' (அங்குலத்திற்கு) குறையாமலும் இலக்கம் '1'ஐ தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு எண்ணிற்கும் அல்லது எழுத்திற்கும் எடுக்கக்கூடிய இடத்தின் பிரிமாணம் (அளவு) 2 1/2'' (அங்குலத்திற்கு) குறையாமலும் இருத்தல் வேண்டும்.

05 மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய ஊர்திகளின் எண்கள் அல்லது எழுத்துக்கள் ஆகியவற்றிற்கு இடையில் குறைந்தது 1/2'' (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும். அடையாளம் காட்டும் எண்கள் அல்லது எழுத்துக்கள் எழுதப்படும் பொழுது மேலும், கீழும் 1/2'' (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும்

தகட்டின் முன்னும், பின்னும் 1'' (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும் இரண்டு வரிகளில் எழுதப்படும் போது இரண்டு வரிகளுக்குமிடையில் 3/4'' (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும்.

06. அடையாளம் காட்டும் தகடுகளில் எழுதப்படும் எழுத்துக்களுக்கும், எண்களுக்கும் இடையில் 1 1/2'' (அங்குல) இடைவெளியாவது இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் படியே இலக்கத் தகடுகளை அமைத்துக்கொள்

## அனுமதி

யாழ். இந்து மகளிர் கல்லூரி வீதியில் இயங்கி வரும் புங்குடுதீவு இறுபிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் ஆண்டு ஒன்றில் பிள்ளைகளை சேர்த்துக் கொள்ள விரும்புவோர் உடன் மேற்படி வித்தியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் அதிபர் அறிவித்துள்ளார். (22)

## மீனவர்

நடத்தப்பட்டதை அடுத்து பூநகரி, கல்முனைக்கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்த குருநகரைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நேற்றுவரை திரும்பவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி-கல்முனைப் பகுதிக் கடலில் அன்றிரவு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் மீன்பிடியைக் கைவிட்டு கரை திரும்பியிருந்தனர்.

குருநகர் இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த வெனிக்கிலஸ் என்னும் மீனவர் மட்டும் நேற்றுவரை கரை வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# கிரனைட் வெடிக்கவைத்து காதலன்,காதலிதற்கொலை

(கொழும்பு)

விமானப் படையைச் சேர்ந்த ஒருவரும் அவரின் காதலியும் கைக்குண்டை வெடிக்க வைத்து தற்கொலைசெய்துள்ளனர்.

அநுராத புரத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இவர்கள் கையில் எப்படி கைக்குண்டு கிடைத்தது என்பது பற்றி பொலிசார் விசாரணை செய்து வருகிறார்கள்,

## பேச்சிற்கான

வர்.

எவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டாலும் அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாது. இதனைக் கருத்திற்கொண்டாவது விடுதலைப் புலிகளுடன் உடன்பாட்டிற்கு வரவேண்டும். சமஷ்டிகுறித்து பேச புலிகள் தயாராக இருந்த போதிலும் அரசாங்கம் அதுகுறித்து எதுவும் கூறவில்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

வெளிவந்து விட்டது

மாற்றம் ஆண்டுமலர் [5]

(7130)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

02 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம். 37

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-6855, 27-0849, 24-5955, 41-5015, 26-8052, 24-5323, 27-0802, 26-5814, 40-1516, 26-1609, 26-3995, 42-0526, 41-9989, 28-9449, 24-5496, 22-6163, 24-2024, 24-3063, 43-2666, 27-6579-

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

27-7756, 24-6646, 27-9489, 24-3906, 26 3812, 26-0786, 28-7560, 26-2297, 26-2421, 27-4023, 26-7307, 28-5039, 24-2496, 42-3267, 26-2585, 26-5112.

ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

❋ சிறுகதை ❋ கவிதை

## ''மாற்றம்'' ஆண்டுமலர்

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகையின் ஆண்டுமலர் அதிக பக்கங்களுடன் அச்சவுணர்வு, இத்தாலியும் இன்பத்தமிழும், கஞ்சப்பிரபுகள், உருமறைப்பு (சிறுகதை), மணவாழ்க்கையில், இதயமாற்று சிகிச்சை, கவிதைகள் போன்ற பல ஆக்கங்களுடன் சிறப்பாக வெளிவந்துவிட்டது.

## கண்ணீர் அஞ்சலி

லங்கா ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி

2ஆம் வருட மாணவன்

வெ. கனகநாயகத்தின் தந்தை

திரு. கணபதிப்பிள்ளை வெற்றிவேல்

(முன்னாள் கணக்காளர்)

அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம். அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்.

(7131)

## மரண அறிவித்தல்கள்

### திரு. அருணாசலம் கணேசபிள்ளை

திரு. அருணாசலம் கணேசபிள்ளை (முன்னைநாள் கலேவெலை அருணா கோப்பரேசன் உரிமையாளர்) கிளிநொச்சியில் காலமானார். இவர் காரைநகர் பாலாவோடையைப்பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவருமாவார். இவர் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் திரு. தவபாலசிங்கம் (பழைய கண்டி, டீசல் கடை காரைநகர்), திருமதிவி. நேசமணி, திரு. தேவராசா (பிரான்ஸ்) திரு. தயாபரன் (வர்த்தகர் கிளிநொச்சி), திருமதி தனலஸ்மி, திரு. புலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் திரு. விக்னேஸ்வரன் (கொழும்பு), திரு. யோகேந்திரா (காசி) (நியூதேவி ஸ்ரோர்ஸ் பழைய பூங்கா வீதி) ஆகியோரின் மாமனாரும், துஷ்பந்தியின் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

6, அபுபக்கர் வீதி, க. தவபாலசிங்கம்

❋ திங்கள்,செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் வகுப்புகள் நடைபெறும்.

❋ இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.

❋ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்.

❋ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

## பொண்ட் இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லிவீதி - யாழ்ப்பாணம்.

(சி-8272)



ததல்களின் படியே இலக்கத் தகடுகளை அமைத்துக்கொள்ளுமாறு மோட்டார் ஊர்தி உரிமையாளர்களை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்

## தேவை

நல்ல தரத்தில் உள்ள பாவிக்கக் கூடிய பெற்றோல் என் ஜின் ஒக்ஸ்போர்ட் கார் தேவை.

என் ஜின் இல்லாது 'பொடி'(BODY) மட்டும் இருந்தாலும் போதுமானது.

நேரில் தொடர்பு கொள்க:

2/2/1, கோவில் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவில் முன்பாக)
நல்லூர்.

(7124)



## கப்பல்மூலம் வரவழைப்பு

பிறிமா (*PRIMA*) கோழித்தீன் மற்றும்
கால்நடை உணவுப் பொருள்கள்
பிறிமா கோழித்தீன், மாட்டுத்தீன், மற்றும் பிறிமா பண்ணை உணவுகளுக்கும், கால்நடை மருந்துப் பொருள்களுக்கும்

## "மாலவன் வர்த்தக நிலையம்"

## MALAVAN TRADE CENTRE

*138, மானிப்பாய் வீதி,* யாழ்ப்பாணம்.

கப்பல் மூலம் எவ்வளவு தொகையானாலும் யாழ்ப்பாணத்திற்கு ஒழுங்குசெய்து தருகின்றோம். உடனடியாக எம்மோடு தொடர்புகொள்ளவும் பிறிமா கோழிக் குஞ்சுவகைகட்கு முன்கூட்டியே எம்மிடம் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

பிறிமாவின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்: AUTHORIZED DEALERS:

Ceylon Grain Elevators Limited
PRIMA FEEDS

(7125)


❀ சிறுகதை ❀ கவிதை

## போட்டிகளில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும்வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்படவேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப் போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. தவபாலசிங்கம்
(மகன்)

6, அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம். (7127)

## திருமதி
## அன்னலட்சுமி ஐயாத்துரை

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், தற்போது கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி ஐயாத்துரை 01- 01- 94இல்காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு ஐயாத்துரையின் அன்பு மனைவியும் மகேந்திரன், கனகரத்தினம், அரியரத்தினம், வரதலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் சாந்தினியின் அன்பு மாமியாரும், உஷாந்தினி, உஷாந்தன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 04- 01- 94 (செவ்வாய்க்கிழமை) அன்று கனகராயன் குளத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கனகரத்தினம் (சிவா)
(மகன்)

(7128)

## முத்துக்குமாரு சீவரத்தினம்

யாழ் பழம் ரோட்டினை பிறப்பிடமாகவும், ஆத்திசூடியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சீவரத்தினம் 02-01-94 அன்று ஞாயிறு காலை 9 மணி அளவில் காலமாகிவிட்டார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், சதானந்தன் (கிளிநொச்சி), பரமானந்தம் (யாழ்ப்பாணம்), மகேஸ்வரி (கிளிநொச்சி), இராசதுரை (கிளிநொச்சி), ஆனந்தன் (கிளிநொச்சி), இராஜேஸ்வரி (ஜெர்மனி) சச்சிதானந்தன் (குட்டி) (ஜெர்மனி) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார் இதனை மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தற்போதைய முகவரி:
லண்டன் கபே,
கிளிநொச்சி
(7129)

தகவல்:
இராசதுரை
ஆத்திசூடி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.